

திருவாரூர்

சங்கீத மும்மணிகள் ஞாபகார்த்த சபை

ஏற்பாடுசெய்யும்

# பிர்ம்மஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷதர் ஞாபக மண்டப ஸ்தாபன விழா.

25—1—55

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,
ஸ்ரீரங்கம்.

உ

சிவகுகமயம்.

திருவாரூர் பிர்மஸ்ரீ

# முத்துஸ்வாமி தீக்ஷதர் ஞாபகமண்டப ஸ்தாபன விழா.

பெரியோர்களே, அன்பர்களே!

வணக்கம்.

ஸ்ரீபுரம் என்றும் ஹ்ருத் கமலா நகரம் என்றும் விளங்கும் நிறைசெல்வத்திருவாரூர் ஆகிய இத்தப்புண்ணிய க்ஷேத்ரத்தில் எல்லாம் வல்ல இறைவனது திருவருள்கொண்டு அறிவொழுக்கங்களில் சிறந்த பரம பக்தர்களாகிய நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஆரம்பித்து நிலைநாட்ட இருக்கும் சங்கீத மும்மூர்த்திகளின் திருக்கோயில் எழுப்பும் மகத்தான சத்காரியத்திற்கு அடியேனையும் ஒரு பொருட்டாக எண்ணி அழைத்துப் பங்கெடுத்துக் கொள்ளும் வண்ணம் வலியுறுத்தி ஆட்கொண்டது எனதும் எனது மூதாதையருடையதும் ஆன பூர்வபுண்ய பரிபாகம் என்றே கருதுகிறேன். இல்லாவிடில் அடியேன் சிறுமைக்கும் என்னைக் கொண்டு செய்யச் சொல்லியிருக்கும் மகத்தான இக்காரியத்துக்குமுள்ள ஏற்றத்தாழ்வு 'மலைக்கும் மடுவுக்கும்' என்று சொல்லுவதற்கும் மேம்பட்டது! ஆயினும் "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதார்" என்பதற்கிணங்க உங்கள் அன்பையும் திருவருளின் திறத்தையுமே துணை கொண்டு கடமையை ஆற்ற இசைந்தேன்.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரிவாய் பொன்னம்பலத்தெம்முடியாமுதலே என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே."

என்ற மணிவாக்கை மனத்துட் கொண்டே தொண்டர் நாதனைத்தூதிடைவிடுத்த திருத்தொண்டர்கள்குழாம் நிறைந்த சிவன் அடியார்கட்கு முன் இன்று இங்கு உய்க்கப்பெற்றேன்

என்று என் மனம் மிக மகிழ்கின்றேன். தொண்டருக்குத் தொண்டராம் புண்யம் தைவரப் பெறுதல் பெரும் பெரும் சிவ புண்யங்களிலும் பெரிது என்பர் நாவுக்கரசர் அன்றோ. முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ என்று அறுதியிடுகிறது இத்தலச் சிறப்பு.

சிந்தையும் சொல்லும் சென்று கண்டுகொள்ளமுடியாத தன்மையும் தொன்மையும் உடைய எல்லாம்வல்ல முழுமுதற் பொருள் உருவா அருவத்திருமேனி கொண்டு அம்மையப்பராகவும், சோமாஸ்கந்த வீதிவிடங்க சாம்ப பரமேஸ்வரராகிய ஸ்ரீ தியாகராஜ மூர்த்தியாகவும், பரமசிவம் போல் எங்கும் வியாபித்துப் பக்குவமான ஜீவகோடிகளுக்கு அநுக்ரகம் செய்வதாயும், அருட்சக்தியாயும், சத்திநிபாத காலத்தில் உணரப்படுவதாயும் உள்ள பராசக்தியின் ரூபமாகவும் விளங்கி உயிர்கட்கு போக மோக்ஷங்களை அவரவர்கள் வினைக்கு எற்ப கொடுப்பவராகவும், விளங்கும் இத்திருவாரூர் சிவஸ்தலமே பூவுலகில் மிக முக்யமான 24 புண்ய க்ஷேத்திரங்களில் மிகவும் மேம்பட்டது என்று தியாகராஜ லீலை (4)வது லீலை கூறுகிறது. இது புண்யவர க்ஷேத்ரம் என்னும் பெயரும் உடையது.

வேதம், ஆகமம், சாஸ்திரங்கள், ஸ்தோத்திரங்கள் முதலியவை எல்லாம் எடுத்துக் கூறும் உண்மைச் செம்பொருளின் லக்ஷியமாக விளங்குவது இத்திருவாரூர் திருக்கோயிலின் தன்மையும் தொன்மையும் அமைப்பும் என்று சொல்லுவது பொருந்தும். இத்தலத்தின் பூஜை முறைகளும், திருவிழாக்களின் அமைப்புக்களும் வேதாந்த சித்தாந்த சாத்திரங்களின் தத்துவப் பொருளின் விமர்ஸனம் போல் விளங்குவதும் இத்திருவாரூரில்தான் என்றுசொல்லலாம். கடவுளையடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வழிகள் ஏற்படுத்தி சாதன சதுஷ்டயங்களை விவரிக்கும் நூல்கள் எல்லாம் கடைசியில் கைபிடித்தது பக்தி முறைதானே! பக்தி வலையில் படுவோன் வேறெதிலும் அகப்படான். நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கிருக்கும் பொன்னார் சடைப் புண்ணியன். காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறியில் உய்ப்பது

கண்கூடு. நித்யதிருப்தன் ஆகிய பரம்பொருளை எப்படி இலகுவாக அர்ச்சித்து வழிபடுதல் சாலும் என்று இருப்பாருக்கு அருச்சனைப் பாட்டேயாகும் என்று நிறைமொழி மாந்தர் திருவாக்கு கூறுகின்றது.

பக்தர்கள் பரன்வசப்பட்டுப் பாடும் பாட்டுக்குப் பரனும் வசப்பட்டு விடுகிறான் என்பது தானே அடியார்களது சரித்திரங்கள் கூறுவது எல்லாம். சொல்லும் பொருளும் தானே அவனது உருவம். நாதமே தனுவான கடவுளுக்கு நாதமே விருப்பமுடையதாகிறது. அவர் ஸ்வர ரூபமாக இருக்கிறார் என்கிறது வேதம். ஸ்வரம் என்ற பிராண ரூபமாகவும் எல்லா ஜீவர்களிலும் அந்தர்யாமியாக இருக்கிறார். ஸ்வரம் உச்சரிக்கப்படும் போது வேதமாகவும், பாடும்போது சங்கீதமாகவும் விசேஷித்து நிற்கிறது. அடியார்கள் கோஷிக்கும் வேதமும், பாடும் தேவாரமும், பிரபந்தங்களும் கடவுளை மகிழ்விக்கின்றன. "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்" என்று மாணிக்கவாசகர் சித்திரிக்கின்றார். பாட்டிலும், அதன் பொருளிலும், பாடுவார் உள்ளத்திலும், கேட்பார் உள்ளத்திலும் கலந்து நிற்கும் பரம்பொருளின் மகிமையையும், ஆனந்த மேலீட்டையும் நாமே கண்டுகொள்ளுகிறோம். ஆறறிவுடைய மனிதர்களேயன்றி மாக்களும் இப்பாட்டுக்களில் ஈடுபட்டிருந்தனர் என்பது "கிள்ளை பாடுவ, கேட்பன பூவைகள்" என்னும் பெரிய புராணத் திருவாக்கால் இத்தலத்துக்கே மிகவும் உரிமையுடையது. ஓடும் செம்பொன்னும் ஒக்கநோக்கும் பெருமையாளரே சிவனடியார் திருக்கூட்டத்தினர்.

"பண்ணும் பரதமும் நீஞ்சொல் பருவலும் யான் எண்ணும்பொழுது எளிது எய்த நல்காய்" என்கிறார் கவிச்சக்ரவர்த்தி கம்பர். வாகீஸ்வரியாகிய பராசக்தியே எழுத்துக்களையும் சொற்களையும் உடலுறுப்புக்களிலிருந்து உண்டுபண்ணுகிறாள் என்பது நமது சாத்திரங்கள். வாக்கு நான்கு பிரிவுகளாகுமாம். பரா, பச்யந்தி, மத்யமா, வைகரி என்று அவை கூறப்படும். நாக்கில் உச்சரிக்கப்படும் முன் அதற்கு மூன்று உருவங்கள் உண்டு.

முதல் இரண்டும் யோகிகட்கே புலப்படுவன. மத்யமை என்பது வைகரி வாக்கின் சூக்ஷ்ம வடிவுள்ளதாம். வைகரி வாக்கானது அகாராதி க்ஷகாராந்தமான அக்ஷர ஸ்வரூபமானது. இந்த ஐம்பத்தோரக்ஷரங்களும் சிவம் விளங்கும் ஸ்தானங்களாம். ஆகமங்கள் வர்ணத்வா, பதாத்வா, மந்த்ராத்வா என்று கூறுவதும் இவற்றையேயாகும். ஆகையால்தான் இவ்வூர் பராசக்தி பீடம் என்றும், அதன் பக்கத்தில் அக்ஷரபீடமும் அமைந்திருக்கிறது என்றும் மேலோர் கூறுவர். ஸ்ரீதியாகேசன் கோவிலுக்குப்பின்புறம் வாதாபி விநாயகர் பக்கத்தில் மந்திர பீடமும் இருக்கிறது. ஸ்ரீ துர்வாச மகரிஷியும், அகத்தியரும் வழிபாடாற்றினர்கள் என்று தலபுராணம் கூறும். சப்தம் பிறந்த இடம் திருவாரூர் என்று இப்போது சொல்லிவிடலாம் அல்லவா? மூலாதார க்ஷேத்திரத்தின் மகிமையிது. சொல்லின் தாயான பராசக்தியே சங்கீத ரஸிகையாக ஸப்த ஸ்வர ரூபமாக இருக்கிறுள் என்கிறது சாஸ்திரம். மாதிருகாவர்ணரூபினியான சக்தியை நரம்பின் இசை வடிவாய் நின்ற நாயகியே என்று விதந்து போற்றுகிறுர் பட்டர் ஒருவர். ஆகவே சொல்நயமும், பொருள் நயமும், இசை நயமும் நிறைந்த பண்களும், பாட்டுக்களும், பரதமும் இவ்வூரில் உண்டாகி வளர்ந்தது வளர்கிறதுஎன்று சொல்வது உண்மை தானே. சொல் நயப்புக்குச் சுந்தரனர் என்று தம்பிரான் தோழனர் பெருமையடைந்தார் அல்லவா? பின்னவர் கருத்துக்கிசைய முன்னவர்க்கும் முன்னவரான முதலவர் ஸ்ரீதியாகேசரே விருப்பத்தை முட்டின்றி முடித்தார் என்கிறது பெரியபுராணம்.

"ஒருவனய் உலகேத்த நின்ற நாளோர ஓர் உருவே மூவருவம் ஆன நாளோர" என்கிற தேவாரத்தில் அப்பரடிகள் திருவாரூர்த் தியாகேசனின் தொன்மையை நன்கு புலப்படுத்துகிறுர். அவ்வப்போது மகான்கள் தோன்றி பண்ணும் பரதமும் தழைத்து வளரச் செய்வது இவ்வூரில் வழக்கமாக இருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டர் பெருமையும் பெரியபுராண நுட்பமும் தெளிவாயிற்று. கடவுளுக்கு செய்யும் அர்ச்சனைகளில் சிறப்பு வகையான நிருத்தமும் கீத

மும் தோன்றுதொட்டு இந்த தலத்தில் நடந்து வந்தன என்பது வரலாறு. நடனமும் பரதமும் இசை இயல்களும் நன்கு செழித்துவந்தன. எனினும் அவ்வப்போது வியாச மகரிஷி வேதத்தைத் தொகுத்தது போல் சில சில மகான்கள் தோன்றி கீத கீர்தக்கலைகளையும் நன்கு ஆராய்ந்து பயின்று உதவினர். அப்படிப்பட்ட அவதார மகிமை பொருந்திய மூன்று சிரேஷ்டர்களே நமது ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களும், தியாகப்பிரம்மமும், சாமா சாஸ்திரிகளும் என்று கூறுவர். இவர்கள் மூவரும் பரா சக்தியின்பரிபூர்ணகடாக்ஷத்தால் ஜனித்து கலை பயின்று பாவ, ராக, தாளம் என்னும் மூன்று முக்ய லக்ஷணங்களும் சங்கீதத்துக்கு இன்றியமையாத அணிகலன்கள் என்னும் வகையில் அவற்றை செம்மைப்படுத்தி கிருதிகள் இயற்றி ஆத்மார்த்த திருப்தியடைந்ததுடன் சங்கீதத்தையும் சிறப்பித்தனர். தீக்ஷிதரவர்களுடைய கிருதிகள் எல்லாம் பாவம் நன்கு நிறைந்தவை என்றும், தியாகப் பிரம்மத்தின் கிருதிகள் ராக ஸ்வரூபத்தை நன்கு விளக்குபவை என்றும், சாமா சாஸ்திரிகளின் கிருதிகள் தாள ஞானமாகிய லயசுத்தத்தைப் புலப்படுத்துபவை என்றும் அறிந்தநல்லோர் கூறுவர். சங்கீத உலகத்தையே சீர்பெறும் படி விளக்கிய இவர்கள் சங்கீத மும்மூர்த்திகள் என்று அழைக்கப் பெற்றும் போற்றப்படுகின்றனர். இவர்கள் மூவரும் பிறந்த ஊர் இது. இது பிறந்தவர் பிறவாப் பெரும்பதியல்லவா? ஆதலால் இவர்களை நாம் என்றென்றும் கோவிலில் வைத்து வழிபடுதலும் அவசியம் என்பதை சங்கீதப் பிரியர்கள் மனக்கோயிலிலேயே இதுகாறும் வைத்திருந்தனர். அந்த நல்எண்ணம் பொங்கி வழிந்து உருப்பெற்று என்றும் கோவிலாகவே விளங்கும்படி அன்னை பரா சக்தி இப்போது அருள் கூர்ந்தாள். இவர்களுக்கு கோவில் அமைத்து இவர்கள் பாடிய கீர்த்தனங்களை அந்தந்த லக்ஷண லக்ஷ்யங்களுடன் நல்ல சங்கீதமுறையில் பாடப்படுவது மெத்தவும் அவசியம். கர்ண பரம்பரையில் வரும் வித்தை இது ஆனதால் முறையாக கிருதிகள் யாவற்றையும் பாடிப்பாடிக் கேட்டுக்கொண்டே இருக்கச் செய்தல் ஒரு தவமும் கூட.

அதுவே ஸ்ரீ கமலையின் நோக்கம் என்று அடியேன் கருதுகிறேன்.

சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகித் திகழும் பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியினுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

என்று அபிராமி பட்டர் அவர்கள் வருணிக்கிற பாட்டும்,

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம்
அவளும் நிற்பள்" என்னும் சித்தாந்தமும்
"சிவன் சக்தி தன்னை யீன்றும் சக்திதான்
சிவத்தை ஈன்றும்
உவந்திருவரும் புணர்ந்திங்குலகுயி
ரெல்லாம் ஈன்றும்
பவன் பிரமசாரியாகும்
பான்மொழி கன்னியாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித்தன்மைதான்
தெரியுமன்றே"

என்னும் சிவஞான சித்தியார் வாக்கும், வேதாந்த சித்தாந்த சமரஸத்தையும், சிவ சக்தி சமரசத்தையும் மெய்ப்பிக்கின்ற இடம் இது என்று நாம் கண்டு மகிழ்தற்கு கமலையும் லீலை வசந்த தியாகேசனும் கோயில் கொண்டுள்ள திருவாரூர்தான் என்று பெரியோர் கூறுவர்.

கமலாலய நாயகியாகிய பராசக்தி தந்திர சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட காமகலை என்றும் அவளே ஸ்ரீபுர நாயகியான குமாரி என்றும், லலிதை என்றும், பஞ்சதசாக்ஷரி ஸ்வரூபியும், நவாக்ஷரி ரூபியும் ஏகாக்ஷரி ரூபியும் அவளே என்றும், பஞ்ச கிருத்யங்களும் உலகில் நடந்து வரவே யோகாசனத்தில் அவள் அமர்ந்திருக்கிறாள் என்னும் இத்யாதி விவரங்களை வெகு அழகாக விமர்சனம் செய்திருக்கிறார் சென்னை ஸ்ரீ குஹானந்த மண்டலியின் அதிபர் ஸ்ரீ என். சுப்ரமண்ய ஐயரவர்கள். அது இப்போது அச்சுவாகனம் ஏறிக் கொண்டிருக்கிறது, பரதேவதையின் திருவருளே இது.

சங்கீத மும்மணிகளுள் முக்யரான ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் சாக்த ஆகம தந்திரங்களில் சொல்லப்பட்ட மந்திரம், யந்திரம், மூர்த்தி முதலிய ஆவரணங்களையெல்லாம், கம்பீரமான பாவங்களுடன் உரிய ஒப்பற்ற ராகங்களில் கிருதிகளாக அமைத்து ஸ்ரீ கமலாம்பிகையின் மீது பாடியுள்ள நவாவரண கீர்த்தனங்களின் தத்வ மறைமுகப் பொருள்கள் எல்லாம் இந்தப் புத்தகத்தில் விமர்சிக்கப்பட்டிருக்கிறது. தீக்ஷிதரவர்கள் இதனை தனது ஆத்மானந்த மேலீட்டில், தான் அடைந்த இன்பம் இவ்வையகமும் பெறுவதாக என அருளிய சங்கீத உபதேசங்கள் என்று தான் சொல்ல வேணும் இவற்றை.

எழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யுந் துரிசுகளுக்குடனாகி
மாழையொண் கண் பறவையைத் தந்தாண் டானைமதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே.

எனப் பாடும் சுந்தரமூர்த்திகளது மனமும் மொழியும் மெய்யும் மெய்ப்பொருளில் எப்போதும் தோய்ந்தே இருந்து வந்தது அல்லவா? அப்போது அவர் செயல் எல்லாம் சிவச் செயல் ஆகவே விளங்கிற்று. பற்றற்றுத் திருவருள் வழியில் நிற்கும் சிவஞானிகளுக்கு வேண்டியவைகளை அவர்கள் வேண்டாமலே இறைவர் தாமே கொடுப்பர் என்பது சத்யம் அல்லவா. வழிநடைக் களைப்பில் தண்ணீரும் பொதி சோறும் தந்து தண்ணருள் சுவை காட்டுகிறது. செங்கல் ஆனது தங்கமதாகிறது. காலன் முதலை வாய்ப்பிள்ளையை வரவழைத்துத் தருகிறான். இன்னும் ஊமைப் பெண் பேசியதும் ஆண்பனை பெண் பனையானதும் சுண்ணாம்புக் காளவாய் ஈசன் இணையடி நிழலையொத்து இளவேனில் காலத்து சந்த்ரோதய மாலைப் போதில் பூம்பொய்கையின்றும் எழுந்து இனிமையாக வீசும் இளந்தென்றல் காற்றும் மாசில்லாத வீணையின் இன்னிசை நாதமும் போல் மனோக்ஞமாக இருந்ததும் ஆன பலப்பல அத்புதங்கள் பண்ணமைத்த பாட்டு மூலம் உருவாகிறது. தநு கரண புவன போகங்கள் எல்லாம் சிவமயமாய் விளங்குகிறது,

சிவஞானம் கைவரப் பெற்ற செம்மனச் செல்வர்களுக்கு என்பது உண்மையல்லவா ?

நமது சைவசமய ஆசாரியர்கள் மெய்பித்துக் காட்டியருளியபடியே "பாடுவார் பசி தீர்ப்பாய், பரவுவார் பிணி களைவாய்", என்பதற் கேற்பவும் ; பொன்னும் மெய்ப் பொருளும் தருவான் போகமும் திருவும் புணர்ப்பான் என்று போற்றியது பொருந்தவும், நமது சங்கீத மும்மணிகளின் விஷயத்திலும் கடவுளின் திருவருள் பல சமயங்களில் வெளிப்பட்டு அநேக அற்புதங்களைச் செய்துள்ள செய்திகளை இவர்களது திவ்ய சரிதங்களில் ஆங்காங்கு எடுத்துக்காட்டலாம். வேத உபநிடதங்களிலும் சைவ சாத்திரங்களிலும் கூறியுள்ளபடியே பசுக்கள் பலவாயினும் பால் ஒன்றுபோலவும், தெய்வத்தோற்றங்கள் பலவாயினும் திருவருட்சக்தி ஒன்று போலவும், மொழிகள் பலவாயினும் கருத்து ஒன்று போலவும் இவர்களது அதிரசமான கீர்த்தனங்களும் தெலுங்கு சம்ஸ்கிருதம் இந்த பாஷைகளில் விளங்கினாலும் கருத்திலும் பயனிலும் ஒன்று பட்டுப்பெரும் பயன் விளைக்கின்றன என்பது தேற்றம். பல வளங்களும் பல்கலங்களும் பொருந்திய நம் தமிழ் மக்கள் இயல் இசை நாடக கலையருமையைத் தொன்று தொட்டுப் போற்றி வருவது போலவே இம்மும்மூர்த்திகளின் அருளிப் பாட்டுக்களையும் அநுஷ்டித்து வருவது போற்றத்தக்கது.

நாதஜோதி முத்துசாமி தீக்ஷிதர் அவர்கள் சரித்திரத்தை யோகி சுத்தானந்த பாரதியாரே எழுதியிருக்கிறார். தீக்ஷிதர் கிருதிகளைப் பாட தக்க புலமையும் சமஸ்கிருத ஞானமும் அவசியம். தசவித சுமகங்களும் தொண்டையில் கணீரென்று பேசவேண்டும். யோகிகள் எழுதுகிறார் 'தியாகராஜர் சங்கீதத் தென்றல், சாமா சாஸ்திரிகள் இசைச் சூறுவளி, தீக்ஷிதர் சங்கீதக் கடல். மூவரும் அருள் பெற்ற மகான்கள் ஆவர். மூவரும் கர்நாடக சங்கீதத்திற்கு உயிரும் உடலும் உள்ளமும் போன்றவர்கள். இம்மூவரும் நாதோபாசனை செய்து ஜீவன் முக்தர்களாக வாழ்ந்து வழிகாட்டிய பெரியோர். அவதார

புருஷர்கள். முத்துக்குமார சுவாமியின் திருவருளால் பிறந்து திருத்தணி முருகனுல் உபதேச குருவின் கடாக்ஷமும் சித்தியும் பெற்று ஸ்ரீராம் என்று எழுதியிருந்த வீணையை கங்கையி லிருந்தும் தெய்வ அருளால் பெற்றவர் தீக்ஷிதர். ஸ்ரீவித்யா ஷோடசாக்ஷரி மந்திரங்களின் சித்தியை அடைந்தவர். மானஸ குருகுஹ என்னும் ஆனந்த பைரவி கீர்த்தனையைப் பாடி தியா னம் செய்ததிலிருந்து நாத அருவி பொங்கி வெள்ளமாக ஓடிச் சங்கீத கலையைப் பெருக்கிற்று. சம்பந்தர், அப்பர், சுந்தரர் போல தீக்ஷிதர் பல க்ஷேத்ரங்களுக்கும் சென்று எல்லா தெய் வங்களின்மீதும் பாடினுர். அவர் தமது சங்கீதத்தை விலைக்கு விற்கவில்லை. அதைப் பாடிப் பாடி சிவார்ப்பணமே செய்தனர். ஸ்ரீ தியாகராஜஸ்வாமி பேரில் ஏராளமான கீர்த்தனங்களைப் பாடி னுர். மனுஷ்யராஜர்களைப் பாடி வறுமையைத் தீர்க்கவில்லை. "தியாகராஜம் பஜரே சித்த தாபத்ரயம் த்யஜரே" என்ற ஹரி கேதாரகௌள கீர்த்தனையைப் பாடிப்பஜனை செய்துகொண்டே யிருந்தார். பசிக் கொடுமை என்னி செய்யுமோ என்று அவர் வீட்டாரும் சிஷ்யர்களும் கவலையுற்றனர். வாசலில் திடீரென்று இரண்டு வண்டி நிரம்ப அரிசி பருப்பு முதலிய எல்லாச் சாமான் களும் வந்து இறங்கின. ஏதோ தெய்வ சங்கற்பம் நடந்தது என்று தீக்ஷிதர் பதினேரு கீர்த்தனங்களைப் பாடி தெய்வ சக் திக்கு நன்றி செலுத்தினுர். 'நவாவரணம்' என்று புகழ்பெற்று ஸ்ரீ கமலாம்பாள் மகிமையை விளக்கும் இந்தக் கீர்த்தனைகள் மந்திரசித்திப் பிரதமானவை. லலிதா ராகத்தில் 'ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஸதா பஜாமி ஹீனமானவாச்ரயம் த்யஜாமி' என்று பாடிய அன்றிரவு சர்வாலங்கார ஆபரண பூஷிதையாக ஸ்ரீ மஹாலக்ஷ்மியே அவரது பத்னிக்கு தரிசனம் கொடுத்தாராம். 'அக்ஷயலிங்க விபோ' என்ற அற்புதமான சங்கராபரண கீர்த் தனையைப் பாடி மூடிய கோவில் கதவு தானே திறக்கும்படி பண்ணினுர்.

எட்டயபுரத்திற்கு கட்டை வண்டியில் பிரயாணம் செய்த போது வழிநெடுக மழையில்லாமல் வரண்டு இருப்பதைக் கண்டு அமிர்த வர்ஷணி ராகத்தில் ஆனந்தாமிர்த வர்ஷணி

என்ற பாட்டைப் பாடியதும் ஜோ என்று மழை கொட்டியது. இப்படி நடந்த பல அத்புதங்களை விவரித்தால் பெருகும்.

தீக்ஷிதர் தக்க மாணவருக்கு நாத வித்தையைத் தமது கீர்த்தனங்களுடன் முறையாக பயிற்றி சங்கீத குருகுலம் நடத்தினர். சிஷ்யன் தம்பியப்பனுக்கு வந்த தீரா வயிற்றுநோயை தமது நவக்ரஹ கீர்த்தனங்களைப் பாராயணம் செய்ததால் போக்கியருளினர். இவரது இசைத் திறமையும் மதுர கானமும் கம்பீரமான சாகித்யமும் பரிசுத்தமான வாழ்க்கையும் நாடெங்கும் புகழ்பெற்றுப் பரவிற்று. நாதோபாசனைசெய்து நாதப்ரஹ்ம ஸ்வரூபமாக வாழ்ந்தவர் ஸ்ரீ தியாகப்ரஹ்மம் என்று சொல்ல வேண்டும். இவர்களும் அநேக அத்புதங்களைச் செய்துள்ளார். கிணற்றில் விழுந்து இறந்த புருஷனை மீள உயிர்ப்பித்தார். ஸ்ரீ ராமலக்ஷ்மணனைத் தமது பல்லக்கைக் காக்கும் சேவகர்களாகக் கொண்ட அத்யந்த பக்தி விசேஷம் உடையவர். காவேரியில் எறியப்பட்ட ஸ்ரீ ராம விக்ரகங்கள் மீண்டும் கண்டெடுக்கப்படுகின்றன. விரிக்கில் பெருகும்.

சாமா சாஸ்திரிகள் பராசக்தி பக்தர். தேவி தியான பரர். தேவி பூஜை செய்பவர். ஸ்ரீ அபிராமபட்டர் அவர்களைப் போலவே ஒரு அதிசயம் இவர் வாழ்க்கையிலும் நடந்தது. இவரது தேவி பூஜையில் அர்த்தசாமத்தில் மதுமாம்சாதிகளை உபயோகிக்கின்றார் என்று அரசனுக்குச் சிலர் கோள் சொல்லி வைத்தனர். அரசனும் திடீரென்று வந்து கதவைத் திறந்து பார்க்கும்போது பாலும் தேனும் புஷ்பமும் பக்ஷணங்களையுமே கண்டு வெட்கிப்போனன்.

சாமா சாஸ்திரிகள் கம்பீர அழகர். அம்பாள் பக்தி பரவசத்திலே இருப்பார். அவரைக் கண்டதும் யாவரும் எழுந்து மரியாதை செய்வார்கள். அவர் சித்தமெல்லாம் காமாக்ஷியின் பக்தியில் ஆழ்ந்திருந்தது. தாம் உண்டு அவளுண்டு கலையுண்டு என்றே அவர் சாதுவாக விளம்பரம் இல்லாமல் இருந்தார். சரபோஜி மகாராஜாவின் சபையில் நடந்த சங்கீதப் போட்டியில் பொப்பிலி கேசவையா என்ற சங்கீத வித்வான் பாடிக் காட்டிய

சாமர்த்தியங்களும் ரவைகளும் சங்கதிகளும் அதிகமாகவே யிருந்ததாம். இனிமேல் சாமா சாஸ்திரிகள் என்ன பாட முடியும் என்று எதிர்பார்த்தபோது "ஓம் காமாக்ஷி" என்று தம்புராவை மீட்டிக்கொண்டு கேசவையாவுக்கு மேல் பல படிகள் ராக ஸ்வர சஞ்சாரங்களைச்செய்து சபையை ஆனந்தக் களிப்புறச் செய்தார். புதிய புதிய சங்கதிகளைப் போட்டு அபூர்வமான கலைத்திறனைக் காட்டிய சாமா சாஸ்திரிகள் கழுத்தில் சரபோஜி ராஜா மாலை சூட்டினார். கேசவையா முகம் சுருங்கி அகங்காரம் தகர்ந்து ஒரு கும்பிடு போட்டு வெளி யேறினான்.

இவ்விதம் அநேக மகிமை நிறைந்த நாத ஜோதி உருவங்களான சங்கீத மும்மூர்த்திகளை நாம் பக்தி சிரத்தையுடன் வழி பட்டால் அவர்கள் அடைந்த சன்மார்க்கச் சிறப்புக்களுடன் நாம் யாவரும் வாழ்ந்து இன்புறுவோம் என்பது முக்காலும் உண்மை.

மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை
 விரி சடையோன்
புல்லிய மென்முலை பொன்னனையாளை
 புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத்
 தொழுமவர்க்கும்
பல்லிய மார்த்திட வெண்பகடூரும்
 பதந் தருமே.

என்று அபிராமி அந்தாதியில் பட்டர் அவர்களே நிச்சயித் திருக்கிறார். கடவுள் அருளை உடனே பெறுவதற்கு சங்கீதமே தகுந்த திறவுகோலாக இருப்பதால், சங்கீத மும்மூர்த்திகளும் அவதரித்த திருவாரூரில் அவர்கள் நினைவை நினைக்க வைக்க எண்ணி பூஜை மண்டபம் உபந்யாச மண்டபம் ஆபீஸ் அறைகள் முதலியவற்றை பொதுமக்களின் நல்லுதவி கொண்டு நாட்டுவித்தல், சங்கீத கச்சேரிகளும் உபந்யாசங்களும் அவ்வப்போது நடக்கச் செய்தல் முதலிய நற்காரியங்களில் ஈடுபட்டுள்ள உங்கள்

மும்மூர்த்தி பிரதிஷ்டா சபா வளர்பிறை சந்திரன் போல் என்றென்றும் விளங்குவதாக கடவுளின் அருளும் பொதுமக்களின் உதவியும் கூட்டுறவும் அமோகமாகப் பெருகவேண்டும் என்று ஸ்ரீ கமலவசந்த தியாகேசனை இறைஞ்சுகிறேன்.

இந்த மகத்தான சேவையில் எனக்கும் முக்ய பங்கு அளித்த உங்கள் பெருந்தன்மையைப் போற்றி மனதார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

நம: பார்வதீ பதே ஹர ஹரமஹாதேவ.

சுபம்

ஜீ. இராஜகோபால் பிள்ளை